**உடதும்பறை பிரதேச சபை - 2024**

------------------------------------------------------------

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

உடதும்பறை பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானம் மற்றும் செலவினக் கணக்கு மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களுக்குரிய பொழிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உடதும்பறை பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்**

இந்நிதிக் கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும்

எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வின் விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட கட்டளைகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்பட்டுள்ளதா எனவும்.

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்.

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.6 நிதிக் கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளில் சபைக்குச் சொந்தமான 05 கட்டிடங்கள் மற்றும் நீர் வழங்கல் முறைமை யொன்றை அபிவிருத்திக்காக செலவிடப்பட்ட மொத்த தொகையான ரூபா. 9,161,969 மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சீர் செய்து கொள்வதாக. | சரியாக கணக்குகளைத் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | முன்னைய ஆண்டின் போது தம்மதியன காணி ஏலத்தில் இருந்து பொதுப் பணிகளுக்காக சபைக்கு மாற்றப்பட்ட ரூபா 300,000 ஆக இருந்த 02 ரூட் மற்றும் 39.03 பேர்ச் காணியின் பெறுமதி கணக்கீடு செய்யப்படவில்லை. | மேற்படி | மேற்படி |
| (இ) | தகணச்சாலையொன்று கட்டப்படாத நிலையில் 2020 ஆம் ஆண்டில், வேலியை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட ரூபா 992,481 ஐ ஹுன்னஸ்கிரிய சுடலைச்சாலை என தவறாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சீர் செய்து கொள்வதாக. | சரியாக கணக்குகளைத் தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.6.2 கணக்காய்விற்காக தேவையான எழுத்துமூல சான்றுகளின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும் மொத்தம் ரூபா. 7,278,503 பெறுமதியான சொத்து விடயமொன்று மற்றும் ரூபா 155,241 ஆன பொறுப்பு விடயமொன்றுக்குரிய ஆவணங்கள் உப ஆவணங்கள் மற்றும் கோவைகள் சமர்ப்பிக்கப்படாததால், கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக பரீட்சிப்பதற்கு முடியவில்லை. | அடுத்த ஆண்டின் போது சீர் செய்து கொள்வதாக. | கணக்கு விடயங்களை உறுதிப்படுத்துவதற்கு உரிய உப ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங் களுடனான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| **(அ)** | **1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம்** | | | |
| (i) | **128 ஆம் பிரிவு** | சபையால் பொது நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும் 116 காணித் துண்டுகளின் உரித்துக்களைப் கையேற்பதற்கு சபை நடவடிக்கை எடுக்கவில்லை. | தொடர்புடைய காணிகளின் உரித்தைப் பெற்றுக் கொள்வதற்கு மேலும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதாக. | சபைக்குச் சொந்தமான காணிகளின் உரித்தைப் கையேற் வேண்டும். |
| (ii) | **149 ஆம் பிரிவு** | சபை பிரதேசத்ததில் அமைந்துள்ள ஒரு ஹோட்டல், வருமானத்திலிருந்து ஒரு சதவீதத்திற்கும் குறையாத அனுமதிப்பத்திரக் கட்டணமாக ரூபா 329,950 ஐ குறைவாக அறவிடப்பட்டிருந்ததுடன் மேலும் மற்றுமொரு ஹொட்டலிலிருந்து தொடர்புடைய கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்ட படி, நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக. | வருமானத்தை சரியாகக் கணக்கிட்டு அறவீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| **(ஆ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிகள்** | | | |
| **218 ஆம் விதி** | காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக ஒவ்வொரு ஆண்டும் கணக்கெடுக்கப்பட வேண்டிய போதிலும் 2007 ஆம் ஆண்டின் பிறகு சபையின் சொத்துக்கள் குறித்து கணிப்பீடொன்று நடத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வின் மூலம் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் வருடாந்த் கணிப்பீடு நடத்தப்பட வேண்டும். |
| **(இ) சுற்றறிக்கை** | | | |
| 2024 ஏப்ரல் 22 ஆந் திகதிய CPC/CLG/4/4 பொறியியலாளர் பொது இலக்க உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கையின் 13 ஆம் பிரிவு. | கொங்கிரீட் வீதிகளின் தரத்தை சரிபார்க்க கொங்கிரீட் மாதிரி சோதனைகள் (Cube Test), கொங்கிரீட்டின் தடிமனை சரிபார்க்க Core Cutter Test மற்றும் அந்த பரிசோதனை அறிக்கைகள் தோல்வியடைந்தால் மட்டுமே சுருக்க சோதனைகள் (Hammer Test) நடத்த அறிவுறுத்தல்கள் வழங்கப் பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் முடிக்கப்பட்ட 33 திட்டங்களில் கொங்கிரீட் மாதிரி சோதனைகள் அல்லது (Cube Test) நடத்தப்பட்டிருக்கவில்லை. | பிரதேச செயலகம் Core Cutter Test சோதனை நடத்த வேண்டாம் என்று அறிவுறுத்தியுள்ளது, மேலும் சுருக்க சோதனை நடத்தப் பட்டுள்ளது. | உள்ளூராட்சி பொறியாளர் வழங்கிய அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,557,431 ஆக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய மீண்டெழும் வருமானம் ரூபா .4,255,725 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | வருமான மூலம் | 2024 மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2023 மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 1,980,500 | 2,103,318 | 2,474,806 | 403,979 | 1,960,500 | 1,171,997 | 1,136,564 | 775,467 |
| (ii) | வாடகை | 3,135,500 | 3,506,786 | 2,418,444 | 4,746,118 | 3,066,400 | 3,237,963 | 3,384,795 | 3,657,776 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 725,600 | 829,961 | 822,411 | 129,300 | 722,650 | 614,100 | 603,350 | 121,750 |
| (iv) | ஏனைய வருமானம் | 9,856,000 | 11,847,287 | 14,394,724 | 6,062,742 | 42,583,400 | 43,351,616 | 40,914,621 | 8,610,179 |
| | மொத்தம் | 15,697,600 | 18,287,352 | 20,110,385 | 11,342,139 | 48,332,950 | 48,375,676 | 46,039,330 | 13,165,172 |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரியும் வரியும்** | | |
| **வீதவரி** | | |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 346,204 ஆன வீதவரி நிலுவையொன்று இருந்ததுடன் அதில் 01 இற்கும் 03 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாக அறவிடப்படாமல் இருந்த மீதி ரூபா 92,323 தொகையும் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட அறவிடப்படாமல் இருந்த மீதி ரூபா ரூபா 45,767 தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 158(1) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அறவிடப் பட்டிருக்கவில்லை. | ஆதனங்களை தடை செய்யும் திட்ட மொன்று செயற்படுத்தி. நிலுவையை அறவிடு வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | நிலுவை வீதவரி சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அறவிடப்பட வேண்டும். |
| **(ஆ) வாடகை** | | |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 21 கடைகளில் இருந்து மொத்தம் ரூபா 4,456,026 ஆன நிலுவை கடை வாடகையை 2015 ஆம் ஆண்டிலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | சபைக்குச் சொந்தமான 06 கடைகளுக்கான நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு வழக்குகள் தொடரப்பட்டுள்ளன, மேலும் அந்த வழக்குகள் தற்போது விசாரணையில் | கடை வாடகையை சரியான நேரத்தில் வசூலிக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | உள்ளன. வழக்குகள் முடிவடைந்கு ˙ தீர்ப்பின் பிரகாரம் அடுத்த் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக. | |

**(இ) நீர் கட்டணங்கள்**

| | | |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான 03 நீர் வழங்கல் திட்டங்களில் நீர் இணைப்புகள் துண்டிக்கப்பட்ட 59 நீர் பாவனையாளரிடமிருந்து 05 ஆண்டுகளுக்கும் மேற்பட்டகாலமாக நிலுவையில் இருக்கம் நீர் கட்டண நிலுவைத் தொகையான ரூபா 250,326 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவையில் உள்ள நீர் கட்டணங்கள் குறித்து சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு கடிதங்கள் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது மேலும் எதிர்காலத்தில் சட்ட நடவடிக்கை எடுக்க திட்டமிடப் பட்டுள்ளதாக. | நிலுவை வருமானங்களை உடனடியாக வசூலிக்க வேண்டும். |

**(ஈ) நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்**

| | | |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பண வருமானம் ரூபா 262,047 தொகையும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 4,334,340 தொகையும் அறவிடப்பட வேண்டியிருந்தது. இதில் 2012 முதல் 2018 ஆம் ஆண்டு வரை நிலுவையாக இருந்த ரூபா 1,353,490 ஆன முத்திரைக் கட்டண மீதியொன்றும் உள்ளடக்கப்பட்டுள்ளது. | நிலுவை பணத்தை அறவிடுவதற்கு வேண்டுகோள் கடிதங்கள் உள்ளூராட்சிமன்ற ஆணையாளர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக. | பெற வேண்டிய வருமானம் பெற்றுக் கொள்ளப்பட டிவண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுது போக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 1987 ஆகஸ்ட் 15 பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 119 ஆம் பிரிவின் பிரகாரம் சபையினால் வாரச்சநதையொன்று நடாத்திச் செல்லப்பட்டிருக்கவில்லை | கொரோனா தொற்றுநோய் காரணமாக ஹுன்னஸ்கிரிய வாரச்சந்தை நடவடிக்கை கள் இடை நிறுத்தப்பட்டதுடன், பல சந்தர்ப்பங்களில் முயற்சிகள் எடுத்த போதிலும், | அதிகார பிரதேசத்தில் உள்ள மக்களின் சேவை களுக்காகச் சட்டத்தில் குறிப்பிடப் பட்டுள்ள செயற்பாடு களை நிறைவேற்றவேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அச்செயற்பாட்டை வெற்றிகர மாக நிறைவேற்ற முடியவில்லை. | |
| (ஆ) | 2010-2017 காலப்பகுதியில் கோவுலேகம பிரதேசத்தில் சுமார் 01 ஏக்கர் பரப்பளவிலான காணியொன்றில் மொத்தம் ரூபா. 8,556,968 செலவிடப்பட்டு திண்மக்கழிவு முகாமைத்துவ பிரிவு நிர்மாணிக்கப்பட்டு, இயந்திரங்கள் வாங்கப்பட்டு, கழிவு முகாமைத்துவ அலகு நிறுவப்பட்ட போதிலும், நோக்கத்திற்கு உட்பட்ட செயற்பாடுகள் நிறைவேற்றப் படாமல் கழிவுகளை உக்கும் மற்றும் உக்காத கழிவுகளாக பிரிக்காமல், சேதன உரங்கள் உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல், மீளாய்வாண்டில் சேகரிக்கப்பட்ட கழிவுகள் ஒரு கழிவுக் கிடங்கு கட்டிடத்தில் துர்நாற்றத்துடன் ஒரீடத்தில் குவிக்கப்பட்டிருந்ததாகவும் 2019 ஆம் ஆண்டு முதல் சேகரிக்கப்பட்ட உக்காத கழிவுகள் வளாகத்தின் கட்டிடமொன்றிலும் குப்பை கிடங்கு உள்ள வளவிலும் முறையற்ற முறையில் குவிக்கப்பட்டிருந்தன. | 2024 ஆம் ஆண்டில் பல சந்தர்ப்பங்களில் இந்த தொகுதிக்கு நுழையும் வீதி மண்சரிவுக்கு உட்பட்டமை மற்றும் கனமழையால் கால அட்டவணையின்படி குப்பைகளை கொண்டு செல்வதில் சிக்கல்கள் உருவாகியுள்ளதாகவும் கால அட்டவணையின் பிரகாரம் கழிவுப்பொருட்கள் வெவ்வேறாக பெற்றுக் கொள்ளல் இடம்பெறுவதாகவும். | தொடர்புடைய சொத்துக்களைப் பயன்படுத்தி கழிவு முகாமையை முறையாகவும் செயற்திறனகவும் செய்ய வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்றிறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கடந்த ஆண்டு ஜுன் 15 முதல் சம்பளமற்ற விடுப்பில் இருந்த ஒரு அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு 2023 ஜுன் மாதத்திற்கு 15 நாட்களுக்கு மாத்திரமே சம்பளம் வழங்க முடியுமாக இருந்த போதிலும் முழு மாதத்திற்கும் சம்பளம் வழங்கப்பட்டதால், ரூபா 25,191 கூடுதலாக வழங்கப்பட்டது. | அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் நிலைமையை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக. | கூடுதலான கொடுப்பனவை அறவிடுவதற்கும் எதிர்கால குறைபாடுகளைத் தடுக்கவும் உள்ளக கட்டுப்பாடுகளைப் பலப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அபிவிருத்தி செயற்திட்ட கடன்பட்டோர் மீதிகளின் மொத்தம் ரூபா 12,295,411 ஆக இருந்ததுடன். அதில் 01 ஆண்டிற்கும் 05 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியை விஞ்சிய மீதி ரூபா 3,573,410 ஆகவும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக காணப்படும் | ரூபா. 2,003,978.16 தொகையை பதிவழிப்பதற்கு 2024 திசெம்பர் 20, ஆந் திகதி , விடயத்திற்க்குப் பொறுப்பான கௌரவ அமைச்சரின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | கடன்பட்டோர் மீதிகளை உடனடியாக அறவிடுவதற்கு அல்லது நிலுவைத் தொகையை முறையாக பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீதிகள் ரூபா 137,058 ஆகவும் இருந்தது. | அங்கீகாரத்திற்குப் பிறகு, தேவையான எதிர்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதாக. | |
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அபிவிருத்தி செயற்திட்ட கடன்கொடுத்தோர் மீதிகளின் மொத்தம் ரூபா 9,897,895 ஆக இருந்ததுடன். அதில் 01 ஆண்டிற்கும் 05 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியை விஞ்சிய மீதி ரூபா 1,443,331 ஆகவும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக காணப்படும் மீதிகள் ரூபா 228,317 ஆகவும் இருந்தது. | எதிர்காலத்தில் இம்மீதியை சீராக்கம் செய்வதாக | செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 விளைவற்ற குறைப் பயன்பாட்டிலான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான ரூபா 12,451,644 ஆன 04 வாகனங்களும் 02 உழவு இயந்திர டேலர்களும் 04 ஆண்டுகள் முதல் 08 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் பயன்படுத்தப் படாமல் காணப்பட்டதுடன் இவ்வாகனங்களை திருத்தம் செய்வதற்கு அல்லது கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திருத்தம் செய்யப்படக் கூடிய வாகனங்களை திருத்தம் செய்வதற்கும் திருத்தம் செய்ய முடியாத வாகனங்களை ஏலத்தில் விற்பனை செய்வதற்கும் நடவடிக்கை எடுப்பதாக. | வாகனங்களை திருத்தம் செய்வதற்கு அல்லது கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2016 ஆம் ஆண்டின் போது புறநகும செயற்திட்டத்தின் கீழ் ரூபா 70,960,398 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த மூன்று மாடிகளுடன் கூடிய பல்நோக்கு கட்டிடத்தின் 4870 சதுர அடி அளவிலான ஹுன்னஸ்கிரிய பல்நோக்கு கட்டிடத்தின் 02, 03 மற்றும் 05 ஆம் இலக்க கடைகள் பயன்பாடின்றி காணப்பட்டன. ஹுன்னஸ்கிரிய வாரச்சந்தை இந்த இடத்தின் கீழ் மாடியில் நடத்திச் செல்லப்பட்டதுடன் 2022 ஆம் ஆண்டு முதல் இதுவரை வாரச்சந்தை நடாத்தப்படாததன் காரணமாக கீழ் மாடியும் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது. இக்கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு எதிர்பார்த்த நோக்கங்கள் நிறைவேற்றப்பட வில்லையெனவும் அதன் பராமரிப்பு நடவடிக்கைகள் | இக்கட்டிடத்தை எதிர்காலத்தில் செயற்பாட்டு ரீதியில் பராமரித்துச் செல்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக. | கட்டிடத்தை ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்கு பயன்படுத்த வேண்டும். |

இடமபெறவில்லையென்பதாலும் கட்டிடம் அழிவடைந்து வருவதும் அவதானிக்கப்பட்டது.

## 3.4 ஒப்பந்த நிர்வாகம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் வீதி தர விலை விகிதங்களின் பிரகாரம் 50 கிலோ சிமெந்து மூடையின் விலை ரூபா 1,891 ஆகவும், 2024 ஆம் ஆண்டில் சந்தை விலை ரூபா. 1,800 ஆகவும் இருந்தது. இருப்பினும், கந்துரட்ட தசாப்தம், மாகாண குறிப்பிட்ட மற்றும் பிரதேச சபை நிதிகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட 33 திட்டங்களில் வீதிகள் மற்றும் வடிகால்கள் நிர்மாணத்தில், 50 கிலோ சிமெந்து மூடை 01 இற்கு ரூபா 2,200 ஆன விசேட விலையொன்று ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கி அங்கீகாரம் ஒன்று இல்லாமல் ரூபா. 1,057,185 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | கந்துரட்ட தசாப்தம் திட்டத்திற்கான மதிப்பீடு களைத் தயாரிக்கும் போது, பிரதேச செயலகம் ரூபா 2,200 என சீமெந்து விலையைப் பயன்படுத்து வதற்கு எழுத்து மூலமான அறிவுறுத்தல்களை வழங்கி யதால் அதன் பிரகாரம் மதிப்பீடுகள் தயாரிக்கப் பட்டுள்ளதாக. | வீதி தர விலை விகிதங்களின் (HSR) பிரகாரம் கொடுப்பனவு செய்ய வேண்டியுள்ளதால் கூடுதலான கொடுப்பனவு அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | அபிவிருத்தி திட்டங்களுக்கான சிறுகற்களின் போக்குவரத்துக்கு பணம் செலுத்தும் போது, அதிகார பிரதேசத்தின் திட்டங்களுக்கு அண்மையிலுள்ள குவாரிகளிலிருந்து காணப்படும் தூரம் திட்டத்திற்கான உண்மையான தூரத்துடன் பட்டியலின் பிரகாரம் செலுத்தப்பட்ட தூரங்களை ஒப்பிடும் போது, 33 திட்டங்களுக்கான போக்குவரத்து செலவுகளுக்காக போலியாக தூரங்களைக் காட்டி ரூபா 388,497 ஆன போக்குவரத்துச் செலவினம் கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | கூடுதலாக செலுத்தப்பட்ட பணத்தை பிடிகாசு கொடுப்பனவுகளிலிருந்து கழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக. | கூடுதலான கொடுப்பனவுகள் அறவிடப்பட வேண்டும். |
| (இ) | பிரதேச சபையின் நிர்மாணப் பணிகளுக்காக, சபையிலிருந்து 27 கி.மீ தொலைவில் உள்ள மஹியங்கனை பகுதியில் ஆற்று மணலைப் பெறக் கூடிய நிலையில், 60 கி.மீ தொலைவில் உள்ள மஹா ஓயா பகுதியிலிருந்து மணல் கொண்டு செல்லப்பட்டதாகக் கூறி ஒப்பந்தகாரர்களுக்கு பணம் செலுத்தியதன் காரணமாக, பரிசோதனைக்கு உட்படுத்திய 33 திட்டங்களுக்கு மொத்தம் ரூபா 1,109,929 அதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டு முதல் மஹியங்கனையில் மணல் பற்றாக்குறை மற்றும் தரம் குறைந்து வருவது தொடர்பான பிரச்சினைகள் உள்ளன. அதன்படி, மஹஓயா பகுதியிலிருந்து மணல் விநியோகம் செய்யப்படுகிறது என்பதாக. | மாவட்ட விலைக் குழு அறிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து கூடுதலான கொடுப்பனவு அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2024 கந்துரட்ட தசாப்தம் திட்டத்தின் கீழ் சூரிய அரண வீதியின் அபிவிருத்திக்காக ரூபா 1,440,561 கொடுப்பனவு் செலுத்தப்பட்டுள்ளது. இந்த திட்டம் தொடர்பான கொடுப்பனவு தொடர்பான ஆய்வில், 2024 வீதி நியம விலை விகிதத்தின் படி ABC கலவைக்கு ஒரு கன மீற்றருக்கு ரூபா. 6,429 செலுத்த முடியும் என்றாலும், ரூபா. 20,000 செலுத்தியதால், 10.75 கன மீற்றருக்கு ரூ.பா 145,888 செலுத்தப்பட்டது, மேலும் பார்ம்வொர்க்கிற்கு (Form Work) ஒரு சதுர மீற்றருக்கு ரூபா 1,536 செலுத்த முடியுமாக இருந்த போதிலும், ரூபா. 2,500 செலுத்தியதால், 23.50 சதுர மீற்றருக்கு ரூ. 22,654 கூடுதலாக செலுத்தப்பட்டுள்னமை கண்டறியப்பட்டது. | கந்துரட்ட தசாப்த திட்டத்தின் மீ முரே சூரிய அரண திட்டத்தை மேற்கொள்ள எந்த சங்கமும் முன்வராததால், பிரதேச செயலகம் திட்டத்திற்கான ஒப்பந்தகாரர்களிடமிருந்து விலை விபரங்களை அழைத்து திட்டத்தை மேற்கொள்ளுமாறு தெரிவித்தது. அதன் பிரகாரம், தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்ததாரரால் பொருட்களுக்கு சமர்ப்பிக்கப்பட்ட விலை விபரங்களின் பிரகாரம் பட்டியல்கள் சரிபார்க்கப்பட்டு கொடுப்பனவு செய்யப்படும் என்பதாக. | வீதி தர விலை விகிதங்களின் பிரகாரம் கொடுப்பனவு செய்ய வேண்டியதுடன் கூடுதலான கொடுப்பனவு அறவிடப்பட வேண்டும். |

## 3.5 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவாறான பதவியணியினருடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு 09 பதவிகளில் 15 வெற்றிடங்கள் அவதானிக்கப்பட்டன. | வெறறிடங்களை நிரப்புவதற்காக நடவடிக்கை எடுப்பதாக | வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். |